விலை ரூபா:10.00

Registered as a Newspaper in Srilanka

வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 புரட்டாதி 17 செவ்வாய்க்கிழமை (03.10.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 279

ராம்கோ

MADRAS CEMENTS LTD


RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

# அரசு-விடுதலைப்புலிகள் பேச்சுக்களில் ஈடுபடுவர்!



## பௌயர் நம்பிக்கை

(கொழும்பு)

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் மீண்டும் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடுவார்கள் என்ற நம்பிக்கையிருப்பதாக இலங்கைக்கான விசேட சமாதானத்தூதுவர் ஜோன் ஹான்ஸன் பௌயர் தெரிவித்துள்ளார்.

சமாதான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக நேற்று முன்தினம் இலங்கை வந்த அவர் நேற்று அரசசமாதானக்குழுவினரை சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## அல்லைப்பிட்டிக்கு சென்ற ஐவரை காணவில்லையென முறைப்பாடு


(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டிக்கு கடந்த மாதம் 24 ஆம் திகதி சென்ற ஐந்து பேர் இதுவரை வீடு திரும்பவில்லையென யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

கடந்த மாதம் 24 ஆம் திகதி மாலை 3 மணிக்கு வேலைக்காக லொறி ஒன்றில் சென்ற ஐந்துபேர் இன்னும் வீடு திரும்பாத நிலையில் அவர்கள் ஒருவரின் உறவினர் இம் முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

கொழும்புத்துறை நெடுங்குளம் வீதியைச் சேர்ந்த லொறிச் சாரதியான சுப்பிரமணியம் தேவமூர்த்தி (வயது 40) என்ற குடும்பஸ்த ரின் உறவினரே இம் முறைப்பாட்டைச் செய் துள்ளார்.

இவருடன் சென்ற மற்றைய நால்வரில் பண்டா மற்றும் பன்னீர்செல்வம் ஆகியோர் எனவும் மற்றையவர் இருவரின் விபரம் தெரிய வில்லை எனவும் அம் முறைப்பாட்டில் தெரி விக்கப்பட்டுள்ளது. (எ-1)


வண்ணை வெங்கடேச வரதராஜப் பெருமாள் பக்தர்கள் புடைசூழ திரு வீதியுலா வரும் காட்சி. (படம் திலீவின்பன்)

## ஜே.வி.பி.-ஜனாதிபதி நேற்று சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

ஜே.வி.பிக்கும்,ஜனாதிபதிக்குமிடையில் நேற்று முக்கிய சந்திப்பொன்று இடம்பெற் றுள்ளது.அலரி மாளிகையில் இடம் பெற்ற சந்திப்பில் அரசுடன் இணைவது குறித்து பேசப்பட்டுள்ளது.

அரசுடனான இப் பேச்சுக்களில் ஜே.வி. பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க கலந்து கொள்ளவில்லை.

கொழும்பில் இராணுவத்தினரால் மேற் கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கை காரணமாக பேச்சுக்களில் கலந்துகொள்ள முடியாமல் போனதாக அவர் அறிவித்துள்ளார்.

ஜே.வி.பியின் சார்பில் கட்சியின் செயலாளர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச ,அநுர குமார ஆகியோர் கலந்து கொண்டனர்.இன்றும் பேச்சுக் கள் தொடரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (சி)

## ஐ.தே.க.-சுதந்திரக்கட்சி இன்று ஒன்று கூடுகின்றன

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஐக்கிய தேசியக்கட்சியும் இன்று பேச்சுக்களில் ஈடு படவுள்ளன.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் இப் பேச்சுக்கள் நடைபெறவுள்ளன. நாட்டின் பொதுப்பிரச்சினையை தீர்ப்பதற்கான இணக் கப்பாடு ஒன்றை ஏற்படுத்துவதற்காகவே இச் சந்திப்பு இடம் பெறவுள்ளது.

பிரதான தேசியப் பிரச்சினையை இனங் காண்பதற்கும் அது தொடர்பான விடயங் ளைத் தேர்ந்தெடுத்து சிபார்சுகளை முன் வைப்பதற்குமான குழுவொன்றும் நியமிக் கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இரு பிரதான கட்சிக ளும் கடந்த 15 ஆம் திகதி பேச்சுவார்த்தை யை ஆரம்பித்தது. இப் பேச்சுக்கள் சிறப்பா கவும் நட்புறவுடனும் முடிவடைந்ததாக ஆரம்பப் பேச்சுவார்த்தையின் பின்னர் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் இரு கட்சி களும் தெரிவித்தன. (04 ஆம் பக்கம் பார்க்க)

## அக்கரைப்பற்றில் நேற்று பொலிஸார் சுட்டுக்கொலை

(அம்பாறை)

அம்பாறை அக்கரைப்பற்று பிரதான வீதி ரொட்டை பகுதியில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் பொத்துவில் பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் பொலிஸார் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொல்லப்பட்டவர் பொத்துவில் ஊரணியைச் சேர்ந்த (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க-ஜே.வி.பி விரைவில் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க ஆகியோர் இடையே விரைவில் நேரடிப்பேச்சுக்கள் நடை பெறவுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

ரணில் இந்த வாரம் தனது அவுஸ்திரேலியப் பயணத்தை நிறைவு செய்த பின்னர் இப் பேச்சுக்கள் நடைபெறக்கூடும் என்றும் ஐக்கிய தேசிக்கட்சியினர் (04 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மூதூரில் பிரசுரம் வீசியது விடுதலைப்புலிகள் அல்ல

## -கண்காணிப்புக் குழு

(திருகோணமலை)

மூதூர் முஸ்லிம்களை வெளியேறுமாறு கோரி துண்டுப்பிரசுரங்களை வீசியது விடுதலைப்புலிகள் அல்ல என்று இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

கண்காணிப்புக் குழுவினரின் கடந்த வார அறிக்கையில் இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவித்தன.

மூதூரில் முஸ்லிம்களை அச்சுறுத்தும் வகையிலான துண்டுப்பிரசுரங்கள் தமிழீழ விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து வெளியிடப்படவில்லை.

மூதூரில் மீளக் குடியேறுமாறு அரசாங்கத்தின் சார்பில் அழுத்தம் கொடுத்து வரும் நிலையில் முஸ்லிம்கள் தரப்பிலிருந்து அந்த அறிக்கை வெளியிடப்பட்டிருக்கலாம் என்று கண்காணிப்புக்குழுவினர் தெரிவித்துள்ளனர். (எ-1)

# கைது செய்தவரை விடுதலை செய்ய எவரும் எனக்கு அழுத்தம் தரவில்லை

## பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

ஆட்கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டவரை விடுதலை செய்வதற்கு எவரும் தனக்கு அழுத்தங்களைக் கொடுக்கவில்லை என்று பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், ஆட்கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கொட்டாஞ்சேனைப் பொலிஸார் ஒருவரைக் கைது செய்துள்ளனர். அவரிடம் தற்போது துரித விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும் சந்தேகநபரை விடுதலை செய்வதற்காக சிலர் எனக்கு அழுத்தம் கொடுத்து வருவதாகப் பரவலாகத் தெரிவிக்கப்பட்டு வருகிறது. இக்குற்றச்சாட்டை நான் முற்றாக மறுக்கிறேன்.

ஆதாரம் இன்றி தகவலை வெளியிட்டு என் மீது குற்றம் சுமத்துவதற்கு முயற்சி செய்வோர்மீது விசாரணைகள் நடத்தப்படும். சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டவரை விசாரணைக்குட்படுத்திய போது அவர் பல தகவல்களை தெரிவித்துள்ளார். இது குறித்து விசாரணைகள் நடத்தப்படும் என்றார். (ச-5)

# நாடாளுமன்ற செயலர் இன்று இலங்கை வருகை

(கொழும்பு)

சர்வதேச நாடாளுமன்ற சங்கத்தின் செயலாளர் அன்ரசன் பி.ஜோன்சன் இன்று இலங்கை வருகிறார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அழைப்பின்பேரிலேயே அவர் இலங்கை வரவுள்ளார். இலங்கை வரும் இவர் அரசியல் கட்சிகளின் தலைவர்களைச் சந்திக்கவுள்ளார். (ச)

# வைத்திய நிறுவனங்களுக்கான கண்காணிப்புக்குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட வைத்திய நிறுவன தலைவர்களுக்கான கண்காணிப்புக்குழுக் கூட்டம் நாளை முற்பகல் 9.30 மணிக்கு சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு சகல நிறுவனத் தலைவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ச)

# கடத்தல் சம்பவங்கள் குறித்து ஐ.நாவில் முறையிடத் தீர்மானம்

(கொழும்பு)



கொழும்பிலும் வடக்குக் கிழக்கிலும் இடம்பெற்று வரும் ஆட்கடத்தல்கள், படுகொலைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறையிடப் போவதாகத் தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் கூறினார்.

கடந்த வெள்ளிக்கிழமை கொட்டாஞ் சேனைப் பொலிஸாரால் கொழும்பில் ஆட்கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த ஒருவர்கைது செய்யப்பட்ட மை தொடர்பாகவும் அவரை விடுவிப்தற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை தொடர்பாகவும் ஊடகவியலாளர்களுக்கு விளக்க மளிக்கவென கொழும்பில் மக்கள் கண்காணிப்புக் குழுவால் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இதனைத் தெரிவித்தார். கொழும்பில் மாத்திரமின்றி வடக்குக் கிழக்கிலும் தமிழர்கள் கடத்தப்படுகின் றனர், கொலை செய்யப்படுகின்றனர்.

அங்கு ஒருநாளைக்கு சராசரி நான்கு அல்லது ஐந்து பேர் கடத்தப்படுகின்றனர். அல்லது கொல்லப்படுகின்றனர்.கொழும்பில் தமிழர்கள் மாத்திரமின்றி சிங்களவர்களும் கடத்தப்படுகின்றனர். கள்வனைப் பிடிக்க கள்வனிடமே முறையிடுவதனால் எந்தப் பயனும் இல்லை என்பது எமக்குத் தெரியும்.

ஆகவேதான் இதை நாம் எமது மக்கள் கண்காணிப்புக் குழுவின் ஊடாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யப் போகின்றோம் என்றார். (ச-5)

# உயிரிழந்த போராளிகளின் சடலங்கள் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு புல்லுமலைத் தாக்குதலில் உயிரிழந்த 11 போராளிகளின் வித்துடல்களை அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ளனர்.

போராளிகளின் வித்துடல்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு தமிழீழ விடுதலைப்புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டதாக மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் எஸ்.சீராளன் தெரிவித்துள்ளார்.

புல்லுமலைத் தாக்குதலில் உயிரிழந்த போராளிகளின் விபரங்களை மட்டக்களப்பு நிர்வாகப் பொறுப்பாளர் மனோஜ் மற்றும் அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் சீராளன் ஆகியோர் வெளியிட்டுள்ளனர். (ச-5)


2011இல் கோவையில் ஒரு பெருவிழா
எங்கள் அதிபரின் மணிவிழா



அமரர் நடராசா சிவகடாட்சம்
(முன்னாள் அதிபர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி)

'2002 இல் அதிபரின் வழிப்படுத்தலில் சிறப்பாகக் கொண்டாடினோம்.
எமது கல்லூரி அன்னையின் நூற்றி ஐம்பதாவது ஆண்டு விழா'
'2011 இல் மேளதாளங்களுடன் வெகுவிமரிசையாகக் கொண்டாடுவோம்.
எங்கள் அதிபர் சிவன் கடாட்சத்தின் மணிவிழா'
'மனித உருவங்கள் மறையலாம்
மானுடம் என்றும் அழியாது'
'உயர்ந்த மனித தத்துவம் கலியுகத்தில் செழிப்பதற்கு
உத்தம மனிதர்கள் உலகில் தோன்ற வேண்டும்'

(462) A/L 2002 மாணவர்கள்


# தொலைபேசி சேவைகள் இன்றுமுதல் முழுமையாக வழங்க நடவடிக்கை

## ரெலிக்கொம் வட்டாரங்கள் தகவல்

யாழ்.குடாநாட்டில் கடந்த காலங்களில் செயலிழந்து போன தொலைபேசிச் சேவைகள் இன்று முதல் முழுமையாக வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐந்து மற்றும் ஆறாம் இலக்கத்தை முதல் இலக்கமாகக் கொண்ட இணைப்புக்கள் பல செயற்படத் தொடங்கியுள்ளன.

சகல இணைப்புகளும் இன்று வழங்கப்பட்டு விடும் என ரெலிக்கொம் வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலை காரணமாக செயலிழந்து போன இச் சேவைகள் முழுமையாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-5,133)


சிறு விளம்பரம்

காவலாளி தேவை

நிறுவனம் ஒன்றுக்கு இரவு நேரக் காவலாளி தேவை. 50 வயதிற்கு மேற்பட்டவர்கள் கீழ்க் காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். S.வைத்தியநாதன், மே/பா. Dr.லே.குகமூர்த்தி, 259, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (465)




மகாத்மா காந்தியின் ஜனன தினத்தை முன்னிட்டு யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் நிறுவப்பட்டுள்ள காந்தி[illegible] திருவுருவச் சிலைக்கு தொழிலதிபர் சிவநேயர் இ.தவகோபால்(ஜே.பி.) மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துவதனைப் படத்தில் காணலாம். படம்:-திலீபன்

சிலர் எதிர்க்கிறார்கள் என்பதால், நன்மையான ஒன்றை அழித்துவிட நான் சம்மதியேன். இதையே வேறு வார்த்தைகளில் சொன்னால் தனிப்பட்டவர்களின் சுதந்திரத்தில் நம்பிக்கையுள்ளவன் நான். —இங்கர்சால்

வலம்புரி

# நிபந்தனை விதித்தால் சமாதானப் பேச்சு சாத்தியமில்லை

சமாதானப் பேச்சுத் தொடர்பில் அரசினால் மூன்று நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த நிபந்தனைகள் நோர்வேயூடாக விடுதலைப்புலிகளின் தலைவருக்கு அறிவிக்கப்படும் என்பது மேலதிக தகவல்.

நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு அரசு தயார். எனினும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான ஒப்புதலை விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தர வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியிருந்தார்.

இவ்விதம் ஜனாதிபதி கூறியதற்கு விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனிடமிருந்து சாதகமான பதில் கிடைத்துள்ளதாக பாதுகாப்புச் சார் பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல ஊடகங்களுக்குக் கூறியிருந்தார்.

விடுதலைப்புலிகளின் தலைமையிடமிருந்து சாதகமான பதில் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டதா? என்பது குறித்து விடுதலைப்புலிகளின் தரப்பிலிருந்து செய்திகள் ஏதேனும் வெளியாகாவிட்டாலும் ஒக்டோபர் மாதத்தில் அரசும் விடுதலைப்புலிகளும் பேச்சுவார்த்தை நடத்துவர் என்ற இணைத் தலைமை நாடுகளின் அறிவிப்புக்கு விடுதலைப் புலிகள் சாதகமான பதிலை வெளிப்படுத்தியிருந்தனர்.

அவ்வகையில் சாதகமான பேச்சுவார்த்தைக்கு விடுதலைப்புலிகள் தயார் என்பது உறுதிப்படுத்தப் படுகின்றது.

ஆயினும் இணைத் தலைமை நாடுகளின் அறிவிப்புக்கு அரசின் பக்கத்திலிருந்து சாதகமான பதில் கிடைக்கவில்லை என்பதற்கு அப்பால் வேறுபட்ட கருத்துக்கள் அரசின் முக்கிய மந்திரிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளன.

'உதவி வழங்கும் நாடுகள் இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிட முடியாது' எனப் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கடந்த ஒரு சில தினங்களுக்கு முன்னர் கூறியுள்ளார்.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நிபந்தனையற்ற சமாதானப் பேச்சுவார்த்தை ஒக்டோபரில் நடைபெறும் என இணைத்தலைமை நாடுகளின் அறிவிப்பு வெளியாகி ஒரு சில மணித்தியாலங்களில்,

அப்படியான அறிவித்தல் எதனையும் அரசு வழங்கவில்லை என அமைச்சர் ரம்புக்வெல தெரிவித்திருந்தார்.

இவ்வாறு அரச தரப்பிலிருந்து சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பில் கிடைக்கின்ற முரண்பாடான தகவல்களின் மத்தியில் இப்போது சமாதானப் பேச்சுவார்த்தைக்கான நிபந்தனை விதிப்பு அரசினால் விடுதலைப்புலிகளுக்கு தெரியப்படுத்தப்படவுள்ளதான செய்தி,சமாதானப் பேச்சுவார்த்தை சாத்தியப்படாது என்பதையே காட்டி நிற்கின்றது.

# கடந்த ஒன்பது மாதங்களில் மட்டும் 15 ஆயிரம் பேர் தமிழகம் சென்றனர்

இலங்கையிலிருந்து கடந்த ஒன்பது மாதங்களில் தமிழகம் சென்றுள்ள அகதிகளின் எண்ணிக்கை 15 ஆயிரத்து 500ஐத் தாண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் இராணுவத்திற்கும் புலிகளுக்கும் இடையில் தொடரும் யுத்தத்தினால் வடக்குக் கிழக்குப் பகுதிகளிலுள்ள அப்பாவித் தமிழர்கள் பலர் பலியாகின்றனர். இப்பகுதிகளிலுள்ள மக்களில் பலர் வீடு வாசல்களை இழந்து உயிருக்கு அஞ்சி அகதிகளாகத் தமிழகம் வந்தபடி உள்ளனர்.

ஆபத்தான கடற்பயணத்திற்கு மத்தியில் இவர்கள் இராமேஸ்வரம், தனுஷ்கோடி, பாம்பன் மண்டபம் உட்பட பல்வேறு கடற்கரைகளில் பட்குகளில் ஆயிரக்கணக்கில் வந்திறங்குகின்றனர்.

இதுபோல் விமானம் மூலமும் சென்னை வந்து அகதிகள் மறுவாழ்வு ஆணையாளரிடம் உரிய அனுமதி பெற்று பொலிஸாரின் விசாரணைக்குப் பின் மண்டபம் அகதிகள் முகாமிற்கு வருகின்றனர் என தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனவரி 12 ஆம் திகதி முதல் இலங்கை அகதிகளின் வருகை அதிகரித்து வருவதால் இங்கிருந்த ஏராளமான அகதிகள் விருப்பத்தின் பேரில் தமிழகத்தின் பல்வேறு முகாம்களுக்கு பொலிஸ் பாதுகாப்புடன் அனுப்பப்பட்டு வருகின்றனர்.

கடந்த செப்ரெம்பர் 30 ஆம் திகதி வரை தமிழகம் வந்துள்ள அகதிகளின் எண்ணிக்கை 15 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.

இதுவரை 5 ஆயிரத்து 748 ஆண்கள், 5 ஆயிரத்து 242 பெண்கள், 2ஆயிரத்து 213 ஆண் குழந்தைகள், 2 ஆயிரத்து 26 பெண் குழந்தைகள் என 4 ஆயிரத்து 499 குடும்பங்களைச் சேர்ந்த 15 ஆயிரத்து 627 அகதிகள் வந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# அனைத்துக் கட்சிகளுடனும் ஐ.தே.க.விரைவில் பேசும்

## திஸ்ஸ அத்தநாயக்க தகவல்

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியுடன் மட்டுமல்லாது பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற சகல கட்சிகளுடனும் விரைவில் பேச்சுவார்த்தை ஒன்றை நடத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளதாக அக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளரும் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சகல கட்சிகளுடனும் எவ்வாறான விடயங்கள் பேச வேண்டும் என்பது குறித்து கட்சியின் உயர் பீடமே தீர்மானிக்கும் என்றும் அவர் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சி விரைவில் ஜே.வி.பியுடன் பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாகவும் பேச்சு நடத்துவதற்காகக் கட்சி சார்பாக நால்வர் கொண்ட குழு நியமிக்கப்பட்டிருப்பதாகவும் வெளிவருகின்ற செய்திகள் குறித்து கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணியுடன் விரைவில் பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாகவும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நால் வர்கொண்ட குழுவை ஐ.தே.க. நியமித்திருப்பதாக ஊடகங் களிலேயே அறிய முடிகின் றதே தவிர அண்மைக்காலமாக வெளிவருகின்ற அவ்வாறான செய்திகளில் எவ்வித உண் மையும் இல்லை.



ஆனால் பாராளுமன்றில் அங்கம் வகிக்கின்ற சகல கட்சிகளுடனும் ஐக்கிய தேசியக் கட்சி வெகு விரைவில் பேச்சு வார்த்தை ஒன்றை நடத்த விருக்கின்றது. ஐ.தே.க., பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி., தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர்காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, மேலக மக்கள் முன்ன ணி மற்றும் ஜாதிக ஹெலஉறுமய போன்ற கட்சிகளுடனும் 17-வது அரசியல் அமைப்புச் சீர்திருத்தம், புதிய தேர்தல் முறை ஆகிய இரு விடயங்கள் குறித்து மட்டுமே பேச்சுவார்த் தை நடத்தப்படவுள்ளது.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளுடனும் தனித்தனியே பேச்சுவார்த்தை நடத்துவதா? அல்லது ஒவ்வொரு கட்சிகளிலிருந்தும் பிரதிநிதிகளை ஒன்றாக அழைத்து பேச்சுவார்த்தை நடத்துவதா? என்பது குறித்து இன்று கூடுகின்ற கட்சி அரசியல் உயர் பீடமே தீர்மானிக்கும்.(ச-5)

# சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிராக அரசாங்கம் துரித சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

சிறுவர்களை துஷ்பிரயோக நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கு எதிராக துரித சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அவ்வாறானவர்கள் பற்றி தகவல்களைவழங்குமாறு பொதுமக்கள் வேண்டப்படுகின்றனர். இலங்கையில் சுமார் 20 ஆயிரம் சிறுவர்கள் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுத்தப்படுவதாக உத்தியோகப்பற்ற தகவல்கள் தெரிவிப்பதாக சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தின் பொறுப்பதிகாரியும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான புத்திக பாலசந்திர தெரிவித்துள்ளார்.

அதிகமாக 16 வயதுக்குக் குறைந்த சிறுவர்களே இவ்வாறு துஷ்பிரயோகத்திற்கு ஆளாக்கப்படுவதாகத் தெரிவிக்கும் பொலிஸ் அத்தியட்சகர் அவ்வாறான சம்பவங்கள் பற்றி தெரியவரும் பொதுமக்கள், தொலைபேசி இலக்கங்களான 0112 444444, 0112 392489 அல்லது 0112 392535 ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு தெரிவிக்குமாறு கேட்டுள்ளார்.

சிறுவர்களை இராணுவ நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தல், சிறுவர்களைப் பாலியல் நடவடிக்கைக்குப் பயன்படுத்தல், வேலைக்கமர்த்தல், போதைப் பொருள் நடவடிக்கைகளுக்கு உபயோகித்தல் போன்ற பல்வேறு விடயங்களை சிறுவர் துஷ்பிரயோகமாகக் கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# வள்ளிபுனம் சிறுமிகள் கைது குறித்து சர்வதேச விசாரணைகள் தேவை

## நிசோர் கோரிக்கை

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு வள்ளிபுனம் மீதான வான்படைத் தாக்குதலில் உயிர்பிழைத்த சிறுமிகளை கைது செய்துள்ள சம்பவம் தொடர்பில் சர்வதேச அளவிலான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வட-கிழக்கு மனித உரிமைகள் செயலகம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து நிசோர் அமைப்பின் தலைவர் கருணாரட்ணம் அடிகளார் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

வள்ளிபுனம் தாக்குதலில் உயிர் பிழைத்த மூன்று சிறுமிகளான சிறிபதி கஸ்தூரி, பாலசிங்கம் சுமித்ரா மற்றும் தம்பிமுத்து தயாளினி ஆகியோர் கண்டி மருத்துவமனையில் மேலதிக சிகிச்சைக்காக சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தின் உதவியுடன் கொண்டு செல்லப்பட்டனர்.

ஆனால் அரசோ மூவரையும் தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் என்று கூறியது. கண்டி மருத்துவமனைக்கு அவர்கள் கொண்டு செல்லப்பட்டது முதல் பொலிஸார் அவர்களை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்தனர்.

மேலும் அடையாளம் காணப்பட முடியாத இடம் ஒன் றில் அவர்களிடம் விசாரணைகளையும் நடத்தியுள்ளனர். சிகிச்சை பெற்று வந்த சுமித்ராவை தற்பொழுது கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினர்தமதுகட்டுப்பாட்டின் கீழ் தடுத்து வைத்துள்ளனர்.

வவுனியாவுக்கு தயாளினியும் கஸ்தூரியும் திருப்பி அனுப்பப்பட்டனர். இதில் தயாளினி உயிர் இழந்துள்ளார். உரிய சிகிச்சை அளிக்கப்படாததால் தயாளினி இறந்ததாக மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகையால் இது தொடர்பில் சர்வதேச குழுவினர் விசாரணைகளை நடத்த வேண்டும் என்று கருணாரட்ணம் அடிகளார் கேட்டுக் கொண்டுள்ளார். (ச-5)

# கூட்டாட்சி குறித்து விளக்க ஐக்கிய தேசியக்கட்சி முடிவு

இலங்கைக்கு கூட்டாட்சி முறையின் அவசியம் குறித்து மக்களிடம் விளக்கும் தொடர் நிகழ்வுகளை நடத்தவுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி. திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியானது கூட்டாட்சி முறையில் நம்பிக்கை கொண்டிருக்கிறது. இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதில் கூட்டாட்சி முறை சாத்தியமானதாக இருக்கும்.

கூட்டரசு என்பது முக்கியமான ஒரு ஜனநாயக அம்சமாகும். எமது கட்சியினருக்கும் இது தொடர்பான பயிலரங்குகளை நடத்தவுள்ளோம்.

கூட்டாட்சி முறை குறித்து இலங்கை மக்களிடையே சாதகமான பார்வை இல்லை. அவர்களுக்கு தவறான தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

ஆகவே மக்களிடத்தில் கூட்டாட்சி முறையை விளக்க திட்டமிட்டுள்ளோம். இருப்பினும் இது தொடர்பில் இயக்கம் நடத்தவேண்டிய அவசியம் ஏதும் இல்லை.

தொடரும் தமிழர் கடத்தல்கள் ,படுகொலைகள், பணம் அறவிடுதல் ஆகியவற்றை ஐக்கியதேசிக்கட்சி கடுமையாக எதிர்க்கிறது. இவை அனைத்தும் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்றார் எஸ்.பி.திஸநாயக்க.(ச-5)





சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக ஆராயவென இலங்கை வந்த நோர்வேயின் விசேட தூதுவர் ஜோன் ஹான்ஸன் பௌயர் ,அரச பேச்சுக்குழுவின் தலைவர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மற்றும் அரச சமாதான குழுவின் தலைவர் பாலித ஹோகன்ன ஆகியோருடன் மேற்கொண்ட சந்திப்பின் போது...

# கூட்டமைப்பு எம்.பிக்களின் போராட்டம் தொடரும் !

## மாவை சேனாதிராசா எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணுமாறு கோரி தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு எம்.பிக்கள் கடந்த வாரம் பாராளுமன்றத்தில் நடத்திய சத்தியாக்கிரகப் போராட்டத்தை இன்று இடம் பெறவுள்ள சபை அமர்வின்போது தொடர்ந்தும் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கூட்டமைப்பின் பாராளுமன்றக்குழுத் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில் கூடிய பாராளுமன்றக்குழு மேற்படி தீர்மானத்தை எடுத்துள்ளது.

ஏ-9 வீதி உட்பட கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு செல்லும் பாதைகளைத் திறக்கவேண்டுமெனக் கோரியும் யாழ்.குடாநாட்டுக்கான உணவுப்பொருட்களை தொடர்ச்சியாக அனுப்புமாறு வலியுறுத்தியும் கூட்டமைப்பு எம்.பிக்கள் கடந்த புதன்கிழமை 27 ஆம் திகதி பாராளுமன்ற சபா மண்டபத்தில் அமைதியான முறையில் சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற சபை அமர்வுகள் வரை சத்தியாக்கிரகப் போராட்டத்தை முன்னெடுத்தபோதும் மேற்படி கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான எத்தகைய உறுதிமொழிகளும் அரசாங்கத்தினால் வழங்கப்படவில்லை. இதனாலேயே இந்த வாரம் இடம்பெறவுள்ள சபை அமர்வுகளின்போதும் போராட்டத்தை அமைதியான முறையில் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழக்கிழமை வரை சபை அமர் வுகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச-5)

# இந்தியாவின் உதவியுடன் சம்பூரில் அனல்மின்நிலையம்

(திருகோணமலை)

திருகோணமலை சம்பூரில் இந்தியாவின் உதவியுடன் அனல் மின் நிலையத்தை அமைக்க அரசு முடிவுசெய்துள்ளது.

இந்தியாவின் உதவியுடன் திருகோணமலையில் அனல் மின்நிலையம் அமைக்க முன்னரே அரசாங்கம் தீர்மானித்திருந்த போதும் எந்த இடத்தில் அமைப்பதென்ற முடிவு செய்யாமல் இருந்தது.

தற்போது சம்பூர் பிரதேசம் இரா்ணுவக் கட்டுப்பாட்டிற்குள் இருப்பதால் அங்கு அனல் மின் நிலையத்தை அமைக்கலாம் என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

முதலாவது அனல் மின்நிலையம் சீனாவின் உதவியுடன் நுரைச்சோலையில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் உதவியுடன் சம்பூரில் தற் போது 500 மெகாவோல்ட் திறனுள்ள அனல் மின் நிலையம் அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அனல் மின் நிலையத்திற்கு தேவையான பொருட்களை கப்பல் மூலம் எடுத்துவர வச திகள் உள்ளதாலேயே சம்பூரில் மின் நிலையத்தை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. (ச-5)

# கொழும்பு நகரப் பகுதியில் நேற்று பாரிய சுற்றிவளைப்பு

(கொழும்பு)

கொழும்பில் நேற்று பாரிய சுற்றிவளைப்புத்தேடுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத் தேடுதலின்போது 10 பேர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக கொழும்புப்பிரதேச பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர தெரிவித்தார்.

நேற்றுக் காலை 9 மணிக்கு ஆரம்பமான இத் தேடுதல் நடவடிக்கை பிற்பகல் ஒரு மணிவரை இடம் பெற்றுள்ளது.

இச் சுற்றிவளைப்பின்போது முக்கிய 9 வீதிகளூடான போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

தேடுதலின்போது 2 ஆயிரத்து 608 வாகனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன் ஆயிரத்து 806 பேர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

ஆவணங்கள் பத்திரங்கள் இல்லாத வாகனம் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (ச)

# கிளிவெட்டியில் வைத்து குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

கிளிவெட்டி பாரதிபுரத்தில் அடையாளம் தெரியாத நபர்களால் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

பாரதிபுரம் ஒழுங்கையில் உள்ள தனது வீட்டிற்கு பொருட்களுடன் திரும்பிக்கொண்டிருந்த எஸ்.தங்கராஜா (வயது 40) என்ற தொழிலாளியே சுட்டுக்கொல்லப்பட்டவர் என தெரியவந்துள்ளது. (ச-5)

## அக்கரைப்பற்றில்...

இரு பிள்ளைகளின் தந்தையான செல்லத்தம்பி திருச்செல்வம் (வயது 38) என அடையாளம் காணப்பட்டுள்ளார். சடலம் அக்கரைப்பற்று வைத்தியசாலை யில் வைக்கப்பட்டுள்ளது. (ச-5)

## அரசு-விடுதலைப்புலிகள்...

இந்த மாதம் சமாதான பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வந்த அவர் நேற்று அரச சமாதானக்குழுவின் தலைவர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மற்றும் அரச சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித ஹோகன்ன ஆகியோரைச் சந்தித்துப் பேசினார்.

இச் சந்திப்பில் பிரஸஸில் நடைபெற்ற இணைத் தலைமை நாடுகளின் கூட்டத்தில் ஆராயப்பட்ட மனிதாபிமானப் பிரச்சினைகள் மற்றும் மனித உரிமைகளின் நிலைமைகள் குறித்து கூடுதலாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

சமாதானச் செயற்பாட்டை முன்னெடுக்குமாறு இணைத்தலைமை நாடுகள் இரு தரப்பினரையும் கேட்டுக்கொண்டனர்.

அதன் அடிப்படையில் இரு தரப்பினரும் மீண்டும் பேச்சுக்கு திரும்பும் நிலை தற்போது ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை அரசாங்கம் முன்வைத்துள்ள மூன்று யோசனைகளும் நோர்வேத் தூதுவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவ் விடயங்கள் குறித்து இன்று விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர், பௌயரிடம் எடுத்துக்கூறவுள்ளார்.

இவ் யோசனைகளுக்கு விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் உத்தரவாதம் மிகவும் முக்கியமானதாக அரச தரப்பு தெரிவித்துள்ளதாகக் கூறப்பட்டது.

இது இவ்வாறிருக்க,அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்குமிடையிலான பேச்சுக்கள் உண்மையாகவும் உரிய முறையிலும் இடம் பெறவேண்டுமென இணைத் தலைமை நாடுகளுக்கும் ஏற்பாட்டாளர்களுக்கும் அரச தரப்பு இறுதித்தடவையாக அறிவித்துள்ளதாக அமைச்சர் சிறிபால டி சில்வா கூறினார்.

பேச்சுக்கள் எந்த நேரத்தில் எந்தக்காலத்தில் நடைபெறவேண்டுமென்பது மூன்றாவது விடயம் என அமைச்சர் கூறினார். (ச)

## ஐ.தே.க.-ஜே.வி.பி....

தெரிவித்தனர்.

ஜே.வி.பியுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் நான்கு பேர் கொண்ட குழு ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பியின் விமல் வீரவன்ச, அநுரா குமார திஸ்ஸ நாயக்க , கே.டி லால்காந்த, விஜித ஹேரத் ஆகியோருடன் ஐக்கிய தேசியக்கட்சியின் தி.மகேஸ்வரன் ஏற்கனவே பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இப் பேச்சுக்கள் வெற்றிகரமாக நடந்ததாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. ஜே.வி.பியினருடனான பேச்சுக்கள் வெற்றிபெறும் நிலையில் ஜாதிக ஹெல உறுமய ,தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினருடனும் ஐக்கிய தேசியக்கட்சி பேச்சுக்களை நடாத்தி ஒரு வலுவான எதிரணியை உருவாக்கத்திட்டமிட்டுள்ளது.

இதன் மூலம் நவம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் நிதிநிலை அறிக்கை மீதான வாக்கெடுப்பில் அரசாங்கத்தை தோற்கடித்துவிட முடியும் என்று ஐக்கிய தேசியக்கட்சி கருதுவதாகவும் அக்கட்சியினர் கூறுகின்றனர். (ச-5)

## ஐ.தே.க....

அதன் பின்னர் 19 ஆம் திகதியும் இரண்டாம் சுற்றுப் பேச்சுக்கள் இடம் பெற்றமை குறிப் பிடத்தக்கது.

இரு கட்சிகளும் பிரதான ஆறு விடயங்களின் கீழ் எதிர்கால நடவடிக்கைகளை ஏற்பாடு செய்வதற்கு உபகுழுக்கள் நியமிக்கப்பட்டது.

இனப்பிரச்சினைத்தீர்வு, தேர்தல் முறைமை திருத்தம்,சிறந்த அரசாட்சி,பொருளாதார அபிவிருத்தி ,தேசநிர்மாணம் மற்றும் சமூக அபிவிருத்தி என்பன குறித்தே குழுக்கள் நியமிக்கப்பட்டன. அது குறித்து இன்றைய கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ளது. (ச)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.10.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.